செ.வெ.எண்: 928 நாள்: 07.12.2017

**ஓகி புயலால் பாதிக்கப்பட்ட மீனவ கிராமங்களான நீரோடி, மார்த்தாண்டன்துறை, வள்ளவிளை, இரவிபுத்தன்துறை, சின்னதுறை, தூத்தூர், பூத்துறை மற்றும் இரயுமன்புத்தன்துறை போன்ற பகுதிகளில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் மீனவ மக்களிடம் நேரில் குறைகளை கேட்டார்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலினால் பாதிக்கப்பட்ட மீனவ கிராமங்களான நீரோடி, மார்த்தாண்டன்துறை, வள்ளவிளை, இரவிபுத்தன்துறை, சின்னதுறை, தூத்தூர், பூத்துறை மற்றும் இரயுமன்புத்தன்துறை போன்ற பகுதிகளில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் மீனவ மக்களிடம் நேரில் குறைகளை கேட்டறிந்து, அதன் பிறகு அப்பகுதி மக்களிடம் பேசும் போது:-

கன்னியர்குமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளை தமிழக அரசின் அனைத்துத்துறைகளை சார்ந்த உயர் அலுவலர்கள், தாம் துறை சார்ந்த பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றனர். காணாமல் போன மீனவர்களை மீனவ கப்பற்படை, இந்திய கடலோர படை, சிறு விமானம் மற்றும் மீன்வளத்துறை போன்ற மீட்புகுழுவினரால் நடுகடல்களில் தேடும் பணிகள் கடந்த ஒருவார காலமாக நடைபெற்று வருகிறது. சில தீவுகளில் கரை ஒதுங்கிய மீனவர்களையும், அவர்களது படகுகளையும் பத்திரமாக மீட்டு, பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டன. மேலும், காணாமல் போன மீனவர்களை தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வருவாய்த்துறை, மூலமாக, பாதிக்கப்பட்ட வீடுகள் முழுவதுமாக இடிந்த வீடுகள் கணக்கெடுக்கப்பட்டு, அவர்களுக்கு அரசு நிவாரண உதவித்தொகை, அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. ஓகி புயலினால் உயிரிழந்த குடும்பங்களுக்கு நிவாரண உதவித்தொகையும் வழங்கப்பட்டுள்ளது. வேளாண்மைத்துறையின் மூலமாக சேதமடைந்த பயிர்களான நெற்பயிர், தென்னை, வாழை, மரவள்ளி கிழங்கு, இரப்பர், கிராம்பு, நல்லமிளகு, பாக்கு மரம் ஆகியவற்றை கணக்கெடுக்கும் பணி தற்போது நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. இப்பணி முடிவடைந்தவுடன், அவர்களுக்கு வழங்க வேண்டிய நிவாரண உதவித்தொகைகள் வழங்கப்படும். மின்சாரத்துறையின் மூலமாக, அதிகமாக பாதிக்கப்பட்ட மலை கிராமங்களில் உடனடியாக மின்சார விநியோகம் செய்வதற்கான பணிகளை பல்வேறு மாவட்டங்களிலிருந்து அழைத்து வரப்பட்ட மின் ஊழியர்கள் செய்து வருகிறார்கள். மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும், குடிநீர் தேவைகள் 100 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாவட்டத்தில் ஒகி புயலினால் பாதிக்கப்பட்ட பாதிப்புகளை கணக்கெடுக்கும் பணிகள் முடிந்தபிறகு, தமிழக அரசுக்கு அறிக்கை அளிக்கப்படும்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**